**தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பாராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 11 வருமான குறியீடுகளுக்கு உரிய திருத்தப்பட்ட வருமான மதிப்பீடொன்று காணப்பிக்கப்பட்ட போதிலும் அதற்குரிய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த மதிப்பீட்டு பெறுமதியை உள்ளபடியான வருமானத்துடன் ஒப்பீடு செய்தபோது 11 வருமான குறியீடுகளுக்கு உரியதாக 67 சதவீதம் முதல் 159 சதவீதம் வரையிலான வீச்சில் வேறுபாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 11 வருமான குறியீடுகள் ஒன்றுக்கொன்று வேறுபாடாக இருந்தமையினால் அவற்றை ஒன்று சேர்த்து செயலாற்றல் சதவீதமாக காண்பித்தல் நடைமுறைக்கு பொருந்தாதிருந்தது. அதன் பிரகாரம் அந்த வருமான குறியீடுகளில் 67 சதவீதம் முதல் 159 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்படாதிருந்தமையை தயவுடன் குறிப்பிடுவதுடன் உரிய 11 வருமான குறியீடுகளினதும் முரண்களுக்குரிய காரணம் காண்பிக்கப்பட்டுள்ளது. | சரியான கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுப்பதற்காக அரசாங்கத்தின் செலவினங்களை என்ன மட்டத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என தீர்மானிப்பதற்காகவும், பாதீட்டு இடைவெளி எவ்வளவு என தீர்மானிப்பதற்காகவும் மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் கொள்கை பகுப்பாய்வுகளுக்காக வருமான எதிர்வுகூறல் மற்றும் அறிக்கைகளை வைத்துக் கொள்ளல் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

(ஆ) **நிலுவை வருமான பரீட்சிப்பு**

| | | | |
|---|---|---|---|
| I. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான அறிக்கையின் பிரமானம் 06 வருமான குறியீடுகளுக்குரிய நிலுவை வருமான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | 11 வருமான குறியீடுகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டு காணப்பட்டமையினால் அவற்றை ஒன்றுசேர்த்து செயலாற்றல் சதவீதமாக காண்பித்தல் நடைமுறைக்கு பொருந்தாதிருந்தது. அதன் பிரகாரம் அந்த வருமான குறியீடுகளில் 67 சதவீதம் முதல் 159 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்படாதிருந்தமையை தயவுடன் குறிப்பிடுவதுடன் உரிய 11 வருமான குறியீடுகளின் முரண்களுக்கு உரிய காரணம் இணைப்பு 01 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு / தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| i. | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 2017 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கு உரிய மொத்த நிலுவை வருமானம் ரூபா 5,361,931,137 ஆக இருந்ததுடன், அது ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ஆன ரூபா 9,896,017,350 தொகையில் 54 சதவீதமாக இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். அதில் 2021.03.31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 3,215 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு / தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii. | 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 4 ஆவது பந்தியின் பிரகாரம் நிலுவை பணத்தை அறவிட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021.03.31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 6,480 மில்லியன் தொகை தீர்க்கப்பட்டுள்ளது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு / தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானம் ஆன ரூபா 9,896,017,350 தொகையில் 89 சதவீதமும் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை வருமானம் ஆகும். | | |
| iii. | 2017 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவை வருமானம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வட்டி மற்றும் கடன் தவணைப் பணம் செலுத்தப்படாமையின் அடிப்படையில் 05 நிறுவனங்களுக்குரிய ரூபா 5,361,288,685 தொகையான நிலுவை வருமானத்தை அறவிடுதல் தொடர்பாக நிச்சியமற்ற நிலைமையொன்று காணப்படுகின்றமை அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலுவைக் கடன் தொகை ஒட்டுமொத்த நிலுவை வருமானத்தில் 54 சதவீதமாக இருந்தது. | இதில் ஒரு நிறுவனம் கடன் தொகை மற்றும் வட்டியை கைவிட்டமைக்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இன்னுமொரு நிறுவனத்திற்கும் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், நிறுவனமொன்றின் வட்டியை கைவிடுவதற்கான அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், ஏனைய 02 நிறுவனங்களினதும் கடன் தொகையை மூலதனமாக்குவதற்கும், கடன் தொகையை மீள் கட்டமைப்பதற்காகவும் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு / தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| II. | 2019 திசெம்பர் 31 இல் ஒப்பிடும் போது 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் குறைவடைந்தமை மற்றும் அதிகரித்தமை தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| i. | வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.01.99 இன் கீழ் அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கின்ற வருமானம் - ஏனைய வாடகைகளுக்குரிய நிலுவை வருமானம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | நிலுவைப் பணத்தில் ஒரு பகுதி தற்போது அறவிடப்பட்டுள்ளது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு / தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 147,356 ஆக காணப்பட்டதுடன், அது 2020 மார்ச் 31 ஆம் திகதி வரையில் ரூபா 1,134,484 இனால் அதாவது 670 சதவீதத்தினால் உயர்வடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| ii. | ஒட்டுமொத்த நிலுவை வருமானம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,428,196,377 ஆக இருந்ததுடன், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 9,896,017,350 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 2,532,179,027 இனால் அதாவது, 20 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு / தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | **வருமான குறியீட்டு இலக்கம் 30.01.01.00 - வெளிநாட்டு மானியம்** | | |
| I. | 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க வெளிநாட்டு உதவிகள் கணக்கு வைப்பதற்குரிய அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு உதவி தொடர்பான சகல கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதிலும், தெரிவுப் பரிசோதனையின் அடிப்படையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்படாமல் 24 நிறுவனங்களினால் 77 செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 2,026 | 1994.04.20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல வெளிநாட்டு உதவி மானியங்களும் வெளிநாட்டு வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டும். | வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் கணக்கு வைத்தல் செயற்பாடுகளை முறையாக செய்ய வேண்டியதுடன், ஒழுங்குபடுத்தலை வலுப்படுத்தி சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் தொகையான வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக உரிய நிறுவனங்களினால் பெறப்பட்டிருந்தது, இந்த மானியங்கள் தொடர்பான தகவல்கள் பொதுத் திறைசேரியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், நிதிஏற்பாடு வழங்கப்பட்டு இந்த மானியங்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இவ்வாறான மானியங்கள் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு கிடைத்திருந்ததா என்ற உறுதிப்படுத்தலை செய்வதற்கான வினைத்திறனுடைய முறைமையொன்று பொதுத் திறைசேரியிடம் காணப்படாதிருந்தமை அவதானிப்பட்டது. | | |
| II. | அவ்வாறே தெரிவு அடிப்படையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் அவ்வாறு பொது திறைசேரிக்கு அறிவிக்கப்படாமல் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களினால் கூட்டுமொத்தமாக ரூபா 1,266 மில்லியன் தொகையான வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அப்பெறுமதி நிதிஏற்பாடு வழங்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1994.04.20 ஆம் திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல வெளிநாட்டு உதவி மானியங்களும் வெளிநாட்டு வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளல் மேற்கொள்ளப்பட வேண்டும். | வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் கணக்கு வைத்தல் செயற்பாடுகளை முறையாக செய்ய வேண்டியதுடன், ஒழுங்குபடுத்தலை வலுப்படுத்தி சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| III. | 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட 12 ஆம் இலக்க வெளிநாட்டு மானியத்தின் (பணமாக கிடைத்தவை) கீழ் மீளாய்வாண்டின் போது கிடைத்த வெளிநாட்டு மானிய செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,174,654,127 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததுடன், உரிய வைப்பு பேரேட்டின் பிரகாரம் அந்த செலவினங்களின் கூட்டுத் தொகை ரூபா 1,010,962,945 ஆக இருந்தது. இந்த வேறுபாட்டில் கூட்டு மொத்தமாக ரூபா 5,306,026 தொகையான வெளிநாட்டு மானியம் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் மீளாய்வாண்டில் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட பெறுமதி மற்றும் கூட்டுமொத்தமான ரூபா 318,803 மிகைக் கட்டணமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களுக்காக கிடைத்த பணத்தை பயன்படுத்தும் பொறுப்பு செயற்திட்ட அமுலாக்கல் நிறுவனத்திற்கு உரியதாகும். | கையளிப்பாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தல் தொடர்பாக இணைப்பினை ஏற்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலை வலுப்படுத்துதல் வேண்டும். |
| IV. | மீளாய்வாண்டில் 05 பங்களிப்பாளர்களில் இருவரிடமிருந்து 06 செயற்திட்டங்களுக்குரியதாக விசேட மானியமாக கிடைக்கப்பெற்றிருந்த போதும் உரிய நோக்கத்திற்கு ஈடுபடுத்தப்படாமல் கூட்டு மொத்தமாக ரூபா 9,655,159 மீண்டும் பங்களிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக கிடைத்த பணத்தை பயன்படுத்தும் பொறுப்பு செயற்திட்ட அமுலாக்கல் நிறுவனத்திற்கு உரியதாக இருந்ததுடன், இது தொடர்பான மேற்பார்வை வெளிநாட்டு வள திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு மானியங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| V. | 2020 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு வெளிநாட்டு மானியமாக கிடைக்கப் பெற்றிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் செயற்பாடற்று காணப்பட்ட வெளிநாட்டு மானியங்களின் பெறுமதி ரூபா 79,716,465 ஆகும். | குறித்த பணிகளுக்காக வெளிநாட்டு உதவி மானியங்களை பயன்படுத்தாமையின் பொறுப்புக்கு உரிய அமைச்சு/ திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு உரியதாகும். | கையளிப்பாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தல் தொடர்பாக இணைப்பினை ஏற்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலை வலுப்படுத்துதல் வேண்டும். |
| VI. | வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 802 – i அறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் ரூபா 4,952,640,578 பெறுமதியான 06 வெளிநாட்டு மானிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அதில் 2020 ஆம் ஆண்டில் ரூபா 874,371,529 தொகை தேறாதிருந்த போதும், அதில் ரூபா 474,391,137 தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதனிடையே வேறுபாடான ரூபா 399,980,397 பெறுமதி / தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பங்களிப்பு நிறுவனத்தினால் திறைசேரி பிரதி செயலாளரின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட தொகையில் செயற்திட்டத்திற்குரிய 2020 ஆம் ஆண்டின் போது உள்ளபடியாக செலவிடப்பட்ட செலவினங்களுக்கு நேரொத்த தொகைகள் மானிய பெறுனவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | கையளிப்பாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தல் தொடர்பாக இணைப்பினை ஏற்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலை வலுப்படுத்துதல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,700,000 மொத்த தேறிய நிதிஏற்பாடும் காலப் பகுதியில் செலவிடப்படாமல் ஆண்டின் இறுதியில் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம்.<br><br>சேமிப்புக்களுக்கான காரணம் நிதிக் கூற்றுக்களில் ACA2(II) படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மிகை நிதிஏற்பாடு ஒதுக்குவதை கட்டுப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மூலதன செலவின மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது 05 செலவின விடயங்களுக்குரிய முரண்கள் 13 சதவீதம் குறைவடைந்தமை முதல் 358 சதவீதம் அதிகரிக்கும் வரையான வீச்சில் வேறுபாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மிகை நிதிஏற்பாடு ஒதுக்குவதை கட்டுப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | 08 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 3,351,637,425 சேமிப்பொன்று காணப்பட்டதுடன், அது தேறிய நிதிஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மிகை நிதிஏற்பாடு ஒதுக்குவதை கட்டுப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட) செலவின பேரேட்டில் 1409 – ஏனைய செலவின விடயத்தின் கீழ் உள்ளடங்கியுள்ள கூட்டுமொத்தமான ரூபா 178,125,563 இலங்கை மத்திய வங்கியின் அரசாங்க அரச கடன் திணைக்களத்தின் தகவல்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . | இலங்கை மத்திய வங்கி 2020 ஆம் ஆண்டிற்குரிய இலாபம் அனுப்பி வைத்தல்களின் போது ரூபா 8,976,987 சர்வதேச அரசிறைமை முறிகள் விநியோகிக்கும் செலவினங்கள் அதில் கழிக்கப்பட்டுள்ளது. | கடன் தொடர்பான தகவல்கள் உரிய நிறுவனங்களில் நாளதுவரையாக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் திட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச நிதி சுற்றறிக்கையின் 02/2020 ஆம் இலக்க 10:1 ஆம் பந்திக்கு இணங்க அரச கணக்குகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று (ACA-C படிவம்) அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று அவ்வாறு தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| I. ஆண்டின் போது முற்பண அறவிடல்கள் ரூபா 10,255,025 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் ரூபா 4,797,790 தொகை காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 5,457,235 தொகையினால் காசு உட்பாய்ச்சல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பணங்களை அறவிடல் மற்றும் முற்பணங்களை செலுத்தும் தொகைகளில் கிடைத்த பெறுமதி மாத்திரம் உள்ளடக்கி திருத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| II. முற்பண கொடுப்பனவுகள் ரூபா 8,232,481 ஆக இருந்த போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பண செலுத்துகைகள் ரூபா 4,513,316 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 3,719,165 இனால் காசு வெளிப்பாய்ச்சல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் காசுப்பாய்ச்சல் கூற்றில் முற்பணங்களை அறவிடல் மற்றும் முற்பணங்களை செலுத்தும் தொகைகளில் கிடைத்த பெறுமதி மாத்திரம் உள்ளடக்கி திருத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 வைப்புக் கணக்கு மீதி

-----------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வைப்புக் கணக்குகள் தொடர்பான பரிசோதனையின் போது மீளாய்வாண்டில் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் மேற்கொள்ளப்படாத கூட்டுமொத்தமாக ரூபா 79,716,727 தொகையான 19 வைப்புக் கணக்குகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இந்த வைப்புக் கணக்குகள் வெளிநாட்டு மானிய பெறுவனவுகளுக்குரியதாக இருந்ததுடன், இவ்வாறு வைப்புக்கள் செயற்பாடற்று காணப்பட்டமையின் காரணமாக அந்த மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,306,026 அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் மற்றும் ரூபா 9,655,159 தொகை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்படாமல் பங்களிப்பாளருக்கு திருப்பி அனுப்பியதன் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | இதில் குறிப்பிடப்பட்ட 19 வைப்புக் கணக்குகளில் 02 கணக்குகள் தொடர்ந்தும் செயற்படு நிலையில் காணப்பட்டது. மேலும், ஒரு கணக்கில் காணப்படுகின்ற மீதியை பயன்படுத்துமாறு தொடர்ச்சியான உரிய அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனைய கணக்கு மீதிகள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட போதும் 2020 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக மீண்டும் ஒரு தடவை அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவ்வாறு இல்லையாயின் அரசாங்க வருமானத்தில் செலவு வைப்பதற்கு அல்லது மிகுதி நடவடிக்கைககள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளதுவரையான புத்தகங்கள், அறிக்கைகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

3.1.1 திறைசேரி அங்கீகரித்த கட்டுநிதி கணக்குகள் - (7002/7003)

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டுநிதி கணக்கு ஆரம்பித்தல் / பேணிச்செல்வதற்காக அதிகாரம் வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்த போதும் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| I. | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அங்கீகரிக்கப்பட்ட (7002) 04 திறைசேரி கட்டுநிதி கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,342,323 செலவு மீதியாகும். | 04 செலவு கட்டுநிதி கணக்குகளின் மீதியில் 03 கணக்குகள் 2021 மார்ச் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மிகுதி மீதி 2021 ஏப்ரல் மாதம் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான வழிகாட்டல்களை வழங்குதல். |
| II. | 2021 மார்ச் இறுதி வரையிலும் (7002) மற்றும் (7003) கணக்குகளில் பல வருட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ஆரம்ப மீதி காணப்பட்ட 03 கணக்குகள் ஆக இருந்ததுடன், அந்த கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 118,227,633 ஆகும். | இந்த 03 கணக்குகளில் ஒரு மீதி மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட அதிக நிதி கஷ்டத்தின் அடிப்படையில் தீர்க்க முடியாதிருந்ததாக அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மீதியொன்றை தீர்த்து வைப்பதற்காக வெளிநாட்டு தூதுரகங்களின் தகவல்களை சேகரித்து மிகுதி நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான வழிகாட்டல்களை வழங்குதல். |

| | | | |
|---|---|---|---|
| | | ஏனைய மீதிகள் தீர்க்க வேண்டிய முறை தொடர்பான ஆலோசனை வழங்கி உரிய அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| III. | மேற்கூறப்பட்ட கணக்குகளில் காணப்பட்ட 7002-0-0-035/13 என்ற கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 91,530,099 ஆக இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய காலப் பகுதிக்குரிய தீர்க்கப்படாத முற்பணங்களில் இருந்து தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முற்பணங்களில் ரூபா 51,979,371 தொகை வெளிநாட்டு தூதரக சேவைக்காக வெளிநாடு சென்ற பதவியணியினருக்கு வழங்கப்படுகின்ற வீடுகளுக்காக வைக்கப்பட்ட 173 பாதுகாப்பு வைப்புக்களை உள்ளடக்கியிருந்து. அந்த பெறுமதியில் ரூபா 4,285,061 தொகை 20 வருடங்களை விஞ்சி காணப்பட்டதுடன், ரூபா 44,284,956 தொகை 10 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடையிலும், ரூபா 3,409,354 தொகையான மீதி 07 வருடங்களையும் விஞ்சியிருந்தது. | 2013 ஆம் ஆண்டில் தீர்க்கப்படாத முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு ஒவ்வொரு தூதுவராலயங்களின் விபரங்கள் தற்போது பெறப்பட்டு மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான வழிகாட்டல்களை வழங்குதல். |
| IV. | அந்த வீடுகளின் 173 பிணைகள் / பாதுகாப்பு வைப்புக்களில் 165 வைப்புக்களுக்கு உரிய ரூபா 47,954,750 தொகை தற்போது வெளிநாட்டு தூதரகங்களின் பதவியணியினரால் பயன்படுத்தப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | வீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள வைப்பை அறவிடுவதற்காக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அது தொடர்பான செயல்முன்னேற்றம் 2021.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு அறிக்கையிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான வழிகாட்டல்களை வழங்குதல். |
| V. | அவ்வாறே 7002-0-0-35/20 என்ற கட்டுநிதி கணக்கில் ரூபா 787,712,457 தொகையான மீதியில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 355,085,724 ஆக இருந்ததுடன், | நிதிப் பிரமாணம் 373 இன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான நாட்குறிப்பு பதிவுகள் மூலம் மாற்றுவதற்கு நடவடிக்கை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான வழிகாட்டல்களை |

| | | | |
|---|---|---|---|
| | அப்பெறுமதியில் ரூபா 327,202,925 தொகை வெளிநாட்டு தூதரகங்களினால் தீர்க்கப்படாத முற்பணங்களில் இருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த முற்பணங்களில் ரூபா 303,909,210 தொகை வெளிநாட்டு தூதரக சேவைகளுக்காக வெளிநாடு சென்ற பதவியணியினர்களுக்கு வழங்கப்பட்ட வீடுகளுக்காக வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்பாக இருந்ததுடன், அதில் ரூபா 20,464,959 .தொகை 10 வருடங்களை விஞ்சியிருந்ததுடன், ரூபா 49,112,123 தொகை 05 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான பெறுமதியாக இருந்தது. மேலும் இந்த பாதுகாப்பு வைப்புக்களில் வெளிநாட்டு தூதரகங்களில் பதிவுசெய்யப்படாத வீடுகளுக்காக வைக்கப்பட்ட 56 வைப்புக்களின் பெறுமதி ரூபா 21,275,938 ஆகும். | எடுக்கப்பட்டுள்ளது. | வழங்குதல். |
| VI. | வெளிநாட்டு தூதுரகங்களில் தீர்க்கப்படாத முற்பணம் ரூபா 23,293,715 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதியாக இருந்ததுடன், அந்த முற்பணத்தில் 2018 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப் பகுதிக்குரிய ரூபா 9,168,655 தொகையும், 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 813,741 தொகையும் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 3,912,255 தொகையும் ஆகும். அதன்படி நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் செயல்நிமித்த உப கட்டுநிதி அந்த பணிகள் நிறைவுபெற்றவுடன் உடனடியாக தீர்க்க வேண்டியிருந்த போதிலும், அந்த பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய காலத்தில் தேவையானவிடத்து உடனடியாக அறவிடுவதற்கு உரிய வெளிநாட்டு தூதரகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான வழிகாட்டல்களை வழங்குதல். |
| (ஆ) | அரச கடன்பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்குகளுக்குக் கொண்டுவரல் திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் | | |

விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| I. | துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 2017 யூலை 20 ஆம் திகதிய MPS/SEC/2017/32 ஆம் இலக்க “அம்பாந்தோட்டை துறைமுக சலுகை உடன்படிக்கை” என்ற பெயரிலான அமைச்சரவை பத்திரத்திற்கு 2017 ஆகஸ்ட் 04 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன், அதன் பிரகாரம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதற்காக அரசினால் பெறப்பட்ட கடன்களில் மேலும் செலுத்த வேண்டியுள்ள மீதியை மீளசெலுத்தும் பொறுப்பு, அந்த சலுகை உடன்படிக்கையில் அமுல்படுத்தப்படுகின்ற திகதி முதல் அமுல்படும் வகையில் பொது திறைசேரியினால் கையேற்கப்பட்டிருந்தது. ரூபா 164,602 மில்லியன் தொகையான அந்த கடன் மீதி குடியரசின் நிதிக் கூற்றுக்களிலோ அல்லது துறைமுக அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களிலோ கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணத்திற்காக அரசாங்கத்தினால் பெறப்பட்ட கடன், 2017 ஆம் ஆண்டு வரை இலங்கை துறைமுக அதிகார சபையினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கடன் சேவை திறைசேரியின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அம்பாந்தோட்டை துறைமுகம், இலங்கை துறைமுக அதிகார சபையின் சொத்தொன்றாக இருந்தமையால் உரிய கடன் தொகையை துறைமுக அதிகார சபையின் புத்தகங்களில் குறிப்பிடப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் என்பவற்றிற்கு முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| II. | 2020 ஆம் ஆண்டில் தேறாதிருந்த 19 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்குரிய மற்றும் 2019 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் தேறாதிருந்த 2019 ஆம் ஆண்டில் அதற்கு முன்னர் தேறாத 05 வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 6,124 மில்லியன் தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வெளிநாட்டு கடனாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய அமைச்சிற்கு உரித்தாக போதியளவான பாதீட்டு நிதிஏற்பாடு இல்லாமை மற்றும் 2020.12.31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் செலவினங்கள் உறுதிப்படுத்தப்படாமையின் காரணமாக இந்த கடன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் என்பவற்றிற்கு முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| III. | வெளிநாட்டு வள திணைக்களத்தின் CS-DRMS 2000 + Report 854-1 அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட வெளிநாட்டு கடன் இலக்கம் 03 இற்குரிய கூட்டுமொத்தமாக ரூபா | இந்த கடன் பணத்தை மீளசெலுத்துதல் 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட போதும், வெளிநாட்டு வள | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் என்பவற்றிற்கு முறையாக மேற்கொள்ளப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | 1,336,519,034 தொகையான கடன் மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் CS-DRMS முறைமையில் அதற்குரிய திகதியில் பதிவதற்கு ஏற்பட்டிருந்தது. மேலும் கடன் தொகையின் கடன் மீதி குறைத்து பதியப்பட்டிருந்தது. | வேண்டும். |
| IV. | 2020 ஆம் ஆண்டின் அரசாங்கத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வெளிநாட்டு கடன் விடயம் இரண்டிற்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 4,399,424,782 தொகையான கடன் மீதியும், வெளிநாட்டு வள திணைக்களத்தின் CS-DRMS 2000 + Report 854-1 அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள கடன் மீதிகளை விட அதிகரித்த பெறுமதியொன்றை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த கடன் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி பிரதி செயலாளர் கணக்கிற்கு கிடைத்திருந்த போதும், வெளிநாட்டு வள திணைக்களம் அந்த தகவல்களை 2021 ஆம் ஆண்டின் போது முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் என்பவற்றிற்கு முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | செலவினங்கள் நிறுவனத்தின் நிதியத்தின் தேவையினை மதிப்பீடு செய்து முன்னுரிமையின் அடிப்படையில் நிதியை விடுவித்தல் திணைக்களத்தின் இன்னுமொரு பிரதான பணியாக இருந்ததுடன், அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| I. | 2020 ஆம் ஆண்டிற்கான மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்கள் முறையே ரூபா 2,804.65 பில்லியன் தொகையும், ரூபா 1,913.51 பில்லியன் தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 4,718.16 பில்லியன் நிதி ஏற்பாடு பாராளுமன்றத்தால் | அமைச்சு / திணைக்களத்திற்கு கட்டுநிதி விடுவிக்கும் போது வருடாந்த கட்டுநிதி எல்லை, மாதாந்தம் மேற்கொள்ளப்பட்ட கட்டுநிதி கோரிக்கை, உத்தியோகபூர்வ | காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் செலவினங்கள் நிறுவனங்களின் தேவையினை மதிப்பிட்டு கட்டுநிதி விடுவித்தல் உச்ச அளவில் செய்தல் |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதில் உள்ளடக்கப்பட்ட மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 1,708.36 பில்லியன் தொகையும், மூலதன செலவினங்களுக்காக ரூபா 458.34 பில்லியன் தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,166.70 பில்லியன் கட்டுநிதி எல்லை விதிக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தினால் அந்த அளவினை விஞ்சி மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 1,777.39 பில்லியன் தொகையும், மூலதன செலவினங்களுக்காக ரூபா 863.23 பில்லியன் தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,640.63 பில்லியன் கட்டுநிதி கோரப்பட்டிருந்தது. எனினும் திறைசேரியினால் அவ்வாறு கோரப்பட்ட கட்டுநிதியில் விடுவிக்கப்படாத ஆகக் குறைவான கட்டுநிதி எல்லையினையும் விட குறைவான மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 1,622.54 பில்லியன் தொகையும், மூலதன செலவினங்களுக்காக ரூபா 325.77 பில்லியன் தொகையும் ஆக கூட்டு மொத்தமாக ரூபா 1,948.31 பில்லியன் கட்டுநிதி நிறுவனத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | வங்கி கணக்குகளில் காணப்படுகின்ற வங்கி மீதி, திரண்ட நிதியத்தின் கீழ் காணப்படுகின்ற நிதி நிலைமை மற்றும் முன்னுரிமைகள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். | வேண்டும். |
| II. | அதன் பிரகாரம் மீண்டெழும் செலவினங்களுக்காக நிறுவனத்தினால் விண்ணப்பிக்கப்பட்ட கட்டு நிதியில் ரூபா 154.86 பில்லியன் தொகை அதாவது 8.71 சதவீதம், மூலதன செலவினங்களுக்காக நிறுவனத்தினால் விண்ணப்பிக்கப்பட்ட கட்டு நிதியில் ரூபா 537.46 பில்லியன் தொகை அதாவது 62.26 சதவீதமும் ஆக கூட்டு மொத்தமாக ரூபா 692.31 பில்லியன் கட்டு நிதி திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது COVID - 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அரசாங்க வருமானத்திற்கு ஏற்பட்ட கணிசமான தாக்கம் நேரடியாக கட்டுநிதி விடுவித்தலிலும் தாக்கமளித்திருந்தது. | காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் செலவினங்கள் நிறுவனங்களின் தேவையினை மதிப்பிட்டு கட்டுநிதி விடுவித்தல் உச்ச அளவில் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அவ்வாறே திணைக்களத்தின் பிரதான பணிகளில் திறைசேரி பிணை முறி விநியோகித்தலும் உள்ளடங்குவதுடன், அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| I. | 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வெளிநிறுவனங்களுக்கு 230 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 1,340,612.19 மில்லியன் தொகையான வங்கி பிணை முறி / சலுகை கடிதங்கள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலாவதியாகியிருந்தது. ரூபா 880 மில்லியன் பெறுமதியுடைய திறைசேரி பிணைமுறிகளுக்குரிய காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சலுகை கடித விநியோகிப்பதற்கான பரிந்துரை செய்தல் அபிவிருத்தி நிதி திணைக்களமாக இருந்ததுடன், அந்த கடிதங்களின் கால நீடித்தல் அந்த திணைக்களத்தின் பரிந்துரை கிடைத்ததும் உடனடியாக மேற்கொள்ளப்படும். | வங்கி பிணை முறி மற்றும் சலுகை கடிதம் விநியோகிக்கும் செயற்பாடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| II. | மிஹின் லங்கா கம்பனிக்காக விநியோகிக்கப்பட்ட சலுகை கடிதம் | | |
| (i) | ஒரு வங்கிக்கு சலுகை கடிதங்கள் இரண்டு ஆகும் வகையில் மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கிக்காக ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் வீதமாக 04 நிலுகை கடிதங்களும், ரூபா 1,650 மில்லியன் தொகையான சலுகைக் கடிதமும் மிஹின் லங்கா விமான கம்பனிக்காக விநியோகிக்கப்பட்டிருந்தது. | இந்த சலுகை கடிதம் அமைச்சரவை அங்கிகாரத்தின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரையின் படியே விநியோகிக்கப்பட்டிருந்தது. | வங்கி பிணை முறி மற்றும் சலுகை கடிதங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | இந்த கடன் தொகையை செலுத்த வேண்டிய கால எல்லை 2016 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்ததுடன், கடன் பணத்தை மீள செலுத்தும் கால எல்லை தொடர்ச்சியாக நீடிக்கப்பட்டு சலுகை கடிதமும் விநியோகிக்கப்பட்டிருந்தது. இறுதி திகதி நீடிக்கும் கால எல்லை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் | இந்த சலுகை கடிதம் அமைச்சரவை அங்கிகாரத்தின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரையின் படியே விநியோகிக்கப்பட்டிருந்தது. | வங்கி பிணை முறி மற்றும் சலுகை கடிதங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒரு வருட காலத்திற்காக அல்லது கலைக்கும் நடவடிக்கைகள் முடிவுறும் வரை என்ற அதில் அல்லது முதலாவதாக இடம்பெறும் திகதிவரை வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | 2016 ஒக்டோபர் மாதம் முதல் மிஹின் லங்கா கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்ட போதிலும், மேற்கூறப்பட்ட கம்பனி கலைக்கும் நடவடிக்கைகள் 2018 மார்ச் 09 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கலைக்கும் செயற்பாடுகள் 06 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தமையும், அதனை நீடிப்பதற்கான அங்கீகாரம் வழங்க முடியாதிருந்தமையும் அமைச்சரவை குறிப்பு இலக்கம் 18/1001/810/005 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் கலைத்தல் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | இந்த சலுகை கடிதம் அமைச்சரவை அங்கிகாரத்தின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரையின் படியே விநியோகிக்கப்பட்டிருந்தது. | வங்கி பிணை முறி மற்றும் சலுகை கடிதங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல் வேண்டும். |
| (iv) | இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,650 மில்லியன் கடன் தொகைக்குரிய 2020 திசெம்பர் 31 ஆம் திகதி 2020 ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 831,400,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், கடன் தொகையான ரூபா 1,650 மில்லியன் மேலும் செலுத்த வேண்டியிருந்தது. | இந்த சலுகை கடிதம் அமைச்சரவை அங்கிகாரத்தின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரையின் படியே விநியோகிக்கப்பட்டிருந்தது. | வங்கி பிணை முறி மற்றும் சலுகை கடிதங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல் வேண்டும். |
| (v) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மக்கள் வங்கியினால் 2020 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1 பில்லியன் தொகையான வரி பெறுமதி மிஹின் லங்கா கம்பனிக்காக விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 1,650 மில்லியன் தொகையான சலுகை கடிதத்திற்குரிய வட்டி ரூபா 909,100,000 தொகை மற்றும் | இந்த சலுகை கடிதம் அமைச்சரவை அங்கிகாரத்தின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரையின் படியே விநியோகிக்கப்பட்டிருந்தது. | வங்கி பிணை முறி மற்றும் சலுகை கடிதங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

மூலதன நிதியத்தில் இருந்து ரூபா 90,900,000 தொகையை தீர்த்து வைப்பதற்காக பயன்படுத்தப்பட்டதாக மக்கள் வங்கியினால் பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த தீர்த்து வைத்தல்கள் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி மாற்றல் பத்திரத்தின் மூலம் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது.